

பொதுப்பணித்துறை மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .எ.வ.வேலு தலைமையில் பொதுப்பணித் துறையின் மூலம் நடை பெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் .கே.பி.சத்தியமூர்த்தி, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் .செல்வராஜ், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி. இளவெண்மால் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் - மேம்பாலம் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

மதுரை, செப். 7-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் மதுரை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் நடைபெற்று வரும் சாலை மற்றும் மேம்பாலக் கட்டுமானப் பணிகளை களஆய்வு செய்தார்.

மதுரையில் நடைபெற்று வரும் கோரிப்பாளையம் மேம்பாலம் மற்றும் அப்பல்லோ சந்திப்பு மேம்பாலக் கட்டுமானப் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று முன்தினம் (05.09.2024) கள ஆய்வு செய்தார்.

மதுரை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான “கோரிப்பாளையம் மற்றும் அப்பல்லோ சந்திப்பில் மேம்பாலம்“ அமைக்கும் பணி முதலமைச்சர் அவர்களால் 30.10.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது. ரூ.150.23 கோடி மதிப்பீட்டில், சிவகங்கை சாலையில் அப்பல்லோ சந்திப்பில் நடைபெற்று வரும் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிகளை அமைச்சர் களஆய்வு செய்து விரைவாக முடிக்க உத்தரவிட்டார்.

இச்சாலை சென்னை, திருச்சி மற்றும் சிவகங்கையிலிருந்து மதுரை மாநகருக்குள் நுழையும் பிரதான சாலையாகும். இச்சாலையில் உள்ள அப்பல்லோ சந்திப்பு, ஆவின் சந்திப்பு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு ஆகிய 3 சந்திப்புகளிலும் தற்போது மிகுந்த போக்குவரத்து நெரிசல் காணப்படுவதால், தற்போது அப்பல்லோ சந்திப்பில் நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் அமைப்பதுடன் மூன்று சந்திப்புகளிலும் ரவுண்டானாவுடன்கூடிய சந்திப்பு மேம்பாடு செய்து நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அமைச்சர் அவர்களின் ஆய்வில், பாலப் பணிக்கு இடையூறாக உள்ள மின் கம்பங்கள், மின்மாற்றிகள் மற்றும் பாதாளசாக்கடை குழாய்களை விரைவில் மாற்றி அமைத்து பாலப்பணிகளை வேகப்படுத்தவும், மேலும், சாலைச் சந்திப்புகள் அகலப்படுத்த தேவையான நிலஎடுப்பு பணிகளை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார். இப்பணிகள் அனைத்தும் ஒப்பந்த காலமான ஆகஸ்டு 2025க்குள் முடிக்க திட்டமிடப்பட்டு பணி துரிதப்படுத்த உத்தரவிட்டார்.

இப்பணி நிறைவுப் பெற்ற பின்னர் மதுரை மாநகரின் பிரதானச்சாலையான சிவகங்கை சாலையில், சுற்றுச்சாலை முதல் கோரிப்பாளையம் வரை, போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும் என்று தெரிவித்தார்.

**கோரிப்பாளையம் மேம்பாலம்!**

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்கள், கோரிப்பாளையம் மேம்பாலம் கட்டும் பணி ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளை கள ஆய்வு செய்தார்.

கோரிப்பாளையம் சந்திப்பானது, மதுரை மாநகரின் வடபகுதியையும், தென்பகுதியையும் இணைக்கும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த மிக முக்கிய சந்திப்பாகும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள், இப்பாலத்தின் ஏறுதளம் தமுக்கம் பகுதியில் தொடங்கி, கோரிப்பாளையம் சந்திப்பை கடந்து, வைகை ஆற்றில் ஆல்பர்ட் விக்டர் பாலத்திற்கு இணையாகப் புதிதாக உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு, நெல்பேட்டை அண்ணா சிலை சந்திப்பில் இறங்கும் வகையில் அமைக்கப்படும் என்றும், மேலும், கோரிப்பாளையம் சந்திப்பிலிருந்து, செல்லூர் நோக்கி கூடுதலாக ஒரு இணைப்பு பாலமும் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, பாலப்பணிகளுக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்கள், மின்மாற்றிகள் மற்றும் பாதாளசாக்கடை குழாய்களை விரைவில் மாற்றி அமைத்து பாலப்பணிகளை விரைவுப்படுத்தவும், மேலும் சேவைச் சாலை அமைக்க தேவையான நிலஎடுப்பு பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அனைத்து மேம்பாலப் பணிகளும் நவம்பர் 2025-க்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் பணிகள் துரிதப்படுத்த உத்தரவிட்டார்.

இப்பணியினால் தமுக்கம் சந்திப்பிலிருந்து அண்ணா சிலை சந்திப்பு வரை மற்றும் செல்லூர் சாலையிலிருந்து அண்ணா பேருந்து நிலையம் வரையிலும் வாகனப் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள், கட்டுமானப் பணிகள் தரமானதாகவும், உறுதியுடனும் இருப்பதைப் பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சரின் களஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி.சௌ.சங்கீதா, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அதிகாரி (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கே.ஜி.சத்திய பிரகாஷ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.சரவணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் உடனிருந்தனர்.

# திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், செப். 7 -

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக “பொது உறுப்பினர்கள் கூட்டம்” 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் தாராபுரம், ஸ்ரீ கோகுல் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகிய எனது முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில்



சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

அதுசமயம், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதி கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், சார்பு அணிகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், கழகத்தின் செயல் வீரர்கள் தவறாது கூட்டத் தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.கழக முப்பெரும் விழா குறித்து.

2.நவம்பர் 27 கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து.

3.வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் போன்ற பணிகள் குறித்து.

4.கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி, விராலிமலை மத்திய ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் கே.பி.ஐயப்பன் வரவேற்பில், ஒன்றிய அவைத்தலைவர் செந்தில்நாதன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் சிறப்புரையில் விராலிமலை மாலா மங்கள மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் த.சந்திரசேகர், மாவட்ட பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, மூத்த கழக முன்னோடி, மேனாள் ஒன்றிய செயலாளர் மு.பி.மணி,பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் சாந்தி தங்கசிங்கம், கை பழனிச்சாமி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.சபாபதி, ஒன்றிய கழக மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.ஜி.எஸ்.சுகி, கிருஷ்ணன், செல்வம், வாட்ச் கண்ணன், கருப்பையா, பசுமை கணேசன், லோகநாதன், ஜெயபால், குமார், பழனிச்சாமி, செல்லத்துரை,ராதா, பாலசுப்பிரமணியன், அன்பு, ரெங்கராஜ், சண்முகம், வள்ளிக்கண்ணன், மல்லிகா, இந்திரா ஆறுமுகம், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக பொது உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## திருப்பத்தூர் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

திருப்பத்தூர், செப். 7–

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர தி.மு.க சார்பில் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் SRK கன்வென்சன் ஹாலில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரு ம், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார்.

திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து, கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், சு.அரசு, டி.ரகுநாத், வீ.வடிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 1454 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில் கோரிக்கை மனுக்கள் வழங்கிய 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், தருமபுரி எம்.பி.ஆ.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, மாநில கைம்பெண் நல வாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, மற்றும் அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## சத்ரபதி சிவாஜி சிலை நொறுங்கியதற்கு-மகாராஷ்ட்ரா

# மக்களிடம் மோடி மன்னிப்புக் கேட்க வேண்டும்!

## எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தல்!

மகாராஷ்டிரா,செப். 7-

சத்ரபதி சிவாஜியிடமல்ல, மகாராஷ்டிரத்தை சேர்ந்த அனைத்து மக்களிடமும் மோடி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார் ராகுல்.

சத்ரபதி சிவாஜியிடமல்ல, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அனைத்து மக்களிடமும் பிரதமர் நரேந்திர மோடி மன்னிப்பு கேட்க வேண்டும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்தார்.

கடந்த மாதம் சிலை உடைந்து விழுந்த விவகாரத்தில், தாங்கள் கடவுளாக நினைக்கும் சத்ரபதி சிவாஜியிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டிருந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மகாராஷ்டிர மாநிலம் சாங்கிலி பகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி உள்ளிட்ட பலர் கலந்து



கொண்டனர்.

இக்கூட்டத்தில் பொது மக்கள் மத்தியில் ராகுல் காந்தி பேசியதாவது,

“சிந்துதுர்க் மாவட்டத்தின் மால்வன் பகுதியில் நிறுவப்பட்டிருந்த சத்ரபதி சிவாஜி சிலை இடிந்து விழுந்த விவகாரத்தில், சிலையிடமல்ல, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அனைத்து மக்களிடமும் பிரதமர் நரேந்திர மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்.

தவறுகளை செய்துவிட்டு மன்னிப்பு கேட்கும் ஒரே நபர் அவர்தான் (மோடி). பிரதமர் எதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்? அதற்கு பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், ஆர்.எஸ்.எஸ். சார்ந்த மக்களுக்கு ஒப்பந்தம் கொடுத்தது. இரண்டாவது சிலை கட்டுமானத்தில் ஊழல் செய்தது, மூன்றாவது சத்ரபதி சிவாஜியைப் போன்ற மரியாதைக்குரியவருக்கு சிலை வைத்து அதனை பராமரிக்காமல் அவமதித்தது. இதுபோன்ற காரணங்களால்தான் சத்ரபதி சிவாஜி சிலை, ஒருசில மாதங்களிலேயே உடைந்தது.

காரணம் எதுவாக இருந்தாலும், பிரதமரும் பாஜகவும் சத்ரபதி சிவாஜியுடன் சேர்ந்து ஒட்டுமொத்த மகாராஷ்டிரத்தின் ஒவ்வொரு குடிமகனிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

வளர்ச்சிக்கு எதிரானது பாஜக கொள்கை

மேலும், “மகாராஷ்டிரத்தில் சத்ரபதி சிவாஜி, ராஜர்ஷி சத்ரபதி சாஹு மகாராஜா, மகாத்மா ஜோதிராதித்ய பூலே, பி.ஆர். அம்பேத்கர் வழியில் மகாராஷ்டிரத்தின் முன்னேற்றத்துக்கான கருத்தியலை காங்கிரஸ் முன்னெடுக்கிறது. தற்போது நடப்பது அரசியல் அல்ல, கருத்தியல் போர். மகாராஷ்டிரத்தை வழிநடத்திய தலைவர்களின் கருத்தியலோடு ஒத்துப்போவது காங்கிரஸின் கொள்கை. ஆனால், அத்தகைய பெருந்தகைகளின் கருத்தியலில் இருந்து முற்றிலும் மாறுபட்டது பாஜக கொள்கை.

நாடு முழுவதும் வெறுப்புணர்வையும், வன்முறையையும் விதைத்து மக்களை பிளவுபடுத்துகிறது பாஜக. காங்கிரஸ் அதற்கு எதிராக போராடி வருகிறது.

நாட்டின் வளங்களும் வளர்ச்சித் திட்டங்களும் தகுதியானவர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காக, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என நீண்ட நாள்களாக கோரிக்கை வைத்து வருகிறோம். ஆனால், பாஜக அதனை நிராகரித்து வந்தது.

பெரும் போராட்டத்துக்குப் பிறகே தற்போது ஒருமனதாக அதற்கு பாஜக ஒப்புக்கொண்டுள்ளது. எந்த சூழ்நிலை வந்தாலும், காங்கிரஸும் அதன் கூட்டணி கட்சிகளும் கட்டாயம் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தும் என உறுதியளிக்கிறேன்” என ராகுல் காந்தி பேசினார்.

# தமிழ் வளர்ச்சித்துறை 6 மண்டலங்களாகப் பிரிப்பு!

சென்னை, செப். 7 -

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ் வளர்ச்சித் துறை முதன் முதலாக ஆறு மண்டிலங்களாகப் பிரிக்கப்பட்டு முனைப்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன

இந்திய அரசமைப்புச் சட்டப்படி, ஆட்சிமொழி என்பது ஒரு மாநிலத்தில் சட்டப் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியாகும். அதன்படி தமிழ்நாட்டில் தமிழ் மட்டுமே ஆட்சிமொழியாகும் என்று 27.12.1956இல் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தினை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அரசு அலுவலகங்களில் தமிழில் அலுவல்களை நடத்த அறிவுரையும் ஆட்சிமொழித் திட்டத்தை செயற்படுத்திடவும் 1957இல் ஆட்சிமொழிக்குழு உருவாக்கப்பட்டது.

ஆட்சிமொழித் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் பரவலாகவும் முழுமையாகவும் செயற்படுத்தும் நோக்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “தமிழ் வளர்ச்சி இயக்ககம்” எனும் தனித்துறைத் தலைமை அலுவலகம் 1971-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு சென்னை, பாரிமுனையில் உள்ள குறளகத்தில். இயங்கி வந்தது. பின்பு 16.01.2000இல் சென்னை, எழும்பூரில் உள்ள அருங்காட்சியக வளாகத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கென தனிவளாகம் உருவாக்கி தனிக்கட்டடத்தில் சிறப்புடன்இயங்கிவருகிறது.

ஆட்சிமொழித்திட்டச் செயலாக்க மேம்பாட்டிற்கு சேலம் மற்றும் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு இரு மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகங்கள் 12.02.1998 அன்று தொடங்கப்பட்டு இரண்டு மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் பணிபுரிந்து வந்தனர். பின்பு 08.08.2013 அன்று சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர் மற்றும் திருப்பூர் ஆகிய 8 மாவட்டங்களிலுள்ள உதவி இயக்குநர் பணியிடங்களை துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்து ஆணையிடப்பெற்றது.

முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் மற்றும் அரசுசார் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாகம் சிறப்பாகவும் தொய்வின்றியும் நடத்திட தொடர்ந்து அறிவுறுத்தப் பட்டு வருகிறது. அதற்கிணங்க தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நிருவாகப் பணிகள் சிறப்பாகவும் தொய்வின்றியும் எளிமையாகவும் மேற்கொள்ளப்படும் வகையிலும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஆட்சிமொழி ஆய்வுக் கூட்டத்தில் செய்தித்துறையில் உள்ளதைப் போன்றே தமிழ் வளர்ச்சித் துறையிலும் தமிழ் வளர்ச்சி இயக்குநரின்கீழ் ஏற்கனவே உள்ள திருநெல்வேலி மண்டிலத்துடன் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை என ஆறு மண்டிலங்களாக வகைப்படுத்தி தமிழ் வளர்ச்சித் துறையில் பணிபுரியும் ஆறு துணை இயக்குநர்களை மண்டில அளவிலான பொறுப்பு கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க 20.08.2024 முதல் செயற்பட தமிழ்நாடு அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் / தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோரால் தொடர்ந்து நடத்தப்பெறும் ஆய்வுக்கூட்டங்களில் ஆறு மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் கலந்து கொண்டு அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களின் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான விவரங்கள் மற்றும் அந்தந்த மாவட்டங்கள் வாயிலாக செயற்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்ற அறிக்கை குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரின் சிந்தனை வடிவமான இவ்வாணையின் வாயிலாக தமிழ் வளர்ச்சித் துறையின் பணிகள் தொய்வின்றி சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் நகரம் பூந்தோட்டம் தொழிலதிபரும் கழக உடன்பிறப்புமான ரத்தினம்குமார் – மாலா ஆகியோரின் இல்லத் திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். வளவனூர் பேரூர் செயலாளர் பா ஜீவா வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், வார்டு பிரதிநிதி தனசேகர், ஜீவன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.